# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# தானியேலும் இரகசிய சொப்பனமும்



எழுதியவர்: Edward Hughes
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
சித்தரிப்பவர்: Jonathan Hay
தழுவியவர்: Mary-Anne S.

**கதைகள்** 60 **ல்** 32

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

ராஜா நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனம் கண்டான், அது அவனை மிகவும் கலங்க செய்தது, தேவனுடைய வல்லமையினாலே, ராஜாவினுடைய சொப்பனத்திற்கு தானியேலால் அர்த்தம் சொல்ல முடிந்தது.





தானியேல் முதலாவது செய்தது என்னவென்றால் சொப்பனத்தை விவரித்தான். "நீர் ஒரு பெரிய சிலையை கண்டீர். அது பயங்கரமாயிருந்தது!"




"அந்தச்சிலையின் தலை பசும் பொன்னாயிருந்தது," தானியேல் தொடர்ந்தான்.
3


"அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தது."
4


"அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது."
5


"அதின் கால்கள் இரும்பிலும், அதின் பாதங்கள் பாதி இரும்பிலும், பாதி களிமண்ணினாலும் செய்யப்பட்டிருந்தது."
6


தானியேல் சிலையை விவரித்த பின்பு, ராஜாவினிடத்தில் மீதி சொப்பனத்தையும் சொன்னான்.
7


"நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போது கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்லைக் கண்டீர்," என்று தானியேல் ராஜாவிடம் சொன்னான்.
8


"அந்தக் கல் பாதங்களின், உருவத்தின்
இரும்பையும், களிமண்ணையும் நொறுக்கி,
அதை துண்டு, துண்டாக
உடைத்துப்போட்டது."
9
"பின்பு அந்த சிலையானது சாம்பலாக
நொறுக்கப்பட்டு, பறந்து போயிற்று."
தானியேல் மவுனமாயிருந்தான்.
"அந்தக் கல் பெரிய மலையாகி
பூமியை நிரப்பிற்று."
10
ராஜா மிகவும் ஆச்சரியப்பட்டான். அவன் சொப்பனத்திலே
கண்டதும் சரியாக அதேதான்! அது தானியேலுக்கு எப்படித்
தெரியும்? தேவன் தானியேலுக்கு சொன்னதினால் மாத்திரமே.
அதன் பின்பு தானியேல் நேபுகாத்நேச்சார் ராஜாவுக்கு
சொப்பனத்தின் அர்த்தத்தை சொன்னான்.
11
"பரலோகத்தின்
தேவன் உமக்கு
ராஜ்ஜியத்தையும்,
வல்லமையையும், ...
12
... பெலத்தையும்
மற்றும்
மகிமையையும்
கொடுத்திருக்கிறார்."
என்று தானியேல்
சொன்னான்.
"நீர்தான் அந்த
தலையாகிய
பொன்."
13
உம்முடைய
பொற்கல ராஜ்ஜியம்
முடிவுபெறுமென
தானியேல்
ராஜாவினிடத்தில்
சொன்னான்.
ராஜ்ஜியம் 1
ராஜ்ஜியம் 2
ராஜ்ஜியம் 3
ராஜ்ஜியம் 4
14

சிலையின் வெள்ளிப் பாகம்
சொல்வது என்னவென்றால்
பலவீனமான ஒரு
ராஜ்ஜியம் அதின்
இடத்தை
எடுத்துக்கொள்ளும்.




15

வெண்கலம் என்பது
இன்னோரு
ராஜ்ஜியத்தை
குறிக்கிறது.
மற்றும் இரும்பும்,
களிமண்ணும்
நான்காவது
ராஜ்ஜியத்தை
குறிக்கிறது.




16

கடைசியாக தானியேல் ராஜாவினிடத்தில் சொன்னது
இதுதான்.



17

"பரலோகத்தின்
தேவன் ஏற்படுத்தபோகிற
ராஜ்ஜியமானது
என்றென்றைக்கும்
அழிந்துபோவதில்லை."



18

தேவன் மாத்திரமே தானியேலுக்கு சொப்பனத்தை
அறிந்து கொள்வதற்கும்,
அதை விளக்குவதற்கும்
உரிய ஞானத்தை
கொடுக்கமுடியுமென
ராஜா கண்டுகொண்டான்.



19

நேபுகாத்நேச்சார்
தானியேலுக்கு ஐஸ்வரியத்தை
வெகுமானமாக கொடுத்து,
ராஜ்ஜியத்தின் மிக
முக்கியமான நபராக
மாற்றினான்.



20













தானியேலும் இரகசிய சொப்பனமும்

## தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

தானியேல் 2

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.